ஔவையார் அருளிச் செய்த

# நல்வழி

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்களின் திருத்தப்பட்ட உரையுடன்







இந்துப் பண்பாட்டு நிதியம்
இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்
இந்துசமய அலுவல்கள் அமைச்சு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
கணபதி துணை

# ஔவையார் அருளிச் செய்த

# நல்வழி



## ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்களின் திருத்தப்பட்ட உரையுடன்



**வெளியீடு**
இந்துப் பண்பாட்டு நிதியம்
இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைப்பு : ஒளவையார் அருளிச் செய்த நல்வழி

பதிப்பு : 2018

பக்கம் : viii + 40

அச்சுப்பதிப்பு : குரு பிறிண்டேர்ஸ்
ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி

வெளியீடு : இந்துப் பண்பாட்டு நிதியம்

விலை : ரூபா 75 /-

ISBN No. : 978-955-9233-86-2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

சைவமுந் தமிழும் எம் மண்ணில் நிலைத்து நிற்பதற்கு அயராது உழைத்தவர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர். அப்பெரு மகனார் எமது சமூகம் நீதி நெறி வழுவாது வாழ்வதற்காக அரிய நீதி நூல்களை அச்சேற்றி வெளியிட்டார்கள். நீதி நெறி சீராகப் பேணப்படாவிட்டாற் சமூகஞ் சீரழிந்துவிடும். இதனை நன்குணர்ந்த நாவலர் பெருமான் எதிர்காலத்திலே எமது குழந்தைகள் மனனஞ் செய்வதற்கேற்ற முறையிற் தொகுத்து வெளியிட்டார்கள். சிறு குழந்தைகளுக்கு ஏடு தொடக்கப்பட்ட பின்பு நீதி நெறிகளைக் கற்பிப்பது சைவத் தமிழர் மரபாகும். உயிரெழுத்துக்களைக் கற்ற பின் உன்னதமான வாழ்வுக்கு கந்த உயரறங்களை அன்று போதித்தனர். உதாரணமாக 'அ' கற்றவுடன் "அறஞ்செய விரும்பு" என்று சொல்லிக் கொடுப்பர். அறத்தை, ஒழுக்கத்தை உயிராக நேசித்தல் வேண்டும் என்பதே இதன் கருத்தாகும்.

மேலைத்தேயங்களில் மழலைகளுக்கு இன்று மனித நேயக் கருத்துக்களைப் புகட்ட வேண்டுமென முன்வந்துள் ளார்கள். ஆனால் நாவலர் பெருமான் 19 ஆம் நூற்றாண் டிலேயே உயர்ந்த மனிதநேயக் கருத்துக்களை நீதி நூல்கள் வாயிலாக எஞ்சமூகம் அறிவதற்கு ஏற்பாடு செய்தார்கள். இந் நூலிற் காணப்படும் அறச் சிந்தனைகள் அற்புதமானவை. அவற்றை நாம் படித்து இப் பிறவியின் பயனைப் புனிதமாகப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேணுவோமாக. இந் நூல்களை எஞ்சமூகத்துக்காக மீளப் பதிப்பித்துதவும் இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக் களத்தின் நற்பணி நன்றிக்குரியது. இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் அவர்களது ஆர் வமும், திணைக்கள உத்தியோகத்தர்களின் முயற்சியும் எமது சமூகத்திற்குப் பேருதவியாக அமையுமென்பதில் ஐயமில்லை.

"சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க்(கு) அணி"

**செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன்,**
*தலைவர் - ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பளை*
*தலைவர் - சிவபூமி அறக் கட்டளை, இலங்கை*
*உபதலைவர் - அகில இலங்கை இந்துமாமன்றம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளியீட்டுரை

ஔவையார், 'விநாயகர் அகவல்' என்ற பக்தி நூலையும் ஆத்திசூடி போன்ற நீதி நூல்களையுந் தந்து தமிழுக்குத் தொண்டாற்றிப் பெண் குலத்திற்குப் பெருமை சேர்த்தவர். தமிழ் இலக்கிய வரலாறு பல ஔவையார்களைக் கண்ட போதும் பன்னிரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஔவையார், நீதி நூல்களை இயற்றியதாக ஆராய்ச்சியாளர்கள் கருது கின்றனர் .

இளமையிற் கற்க வேண்டும்; அறநெறிகள் மாறாமல் வாழ வேண்டும் என்ற விடயங்களை அகர வரிசையிற் பசுமரத் தாணி போல் மனதிற் பதியுமாறு உணர்த்தியவர், வலியுறுத் தியவர் ஔவையார். மிகத் தெளிவாக நீதிக் கருத்துக்களைப் போதித்தவர். சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் முறை இவருக்குக் கைவந்த கலை என்றால் மிகையில்லை.

எது எப்படியோ, நீதி நூல்களின் உண்மையான பயனை, பெருமையை உணர்ந்த ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் அவர்கள், 1843 இல் அந் நூல்களுக்கு உரை எழுதித் தாம் நடத்திய பள்ளிகளில் மாணவர்களுக்கு நன்னெறிகளைக் கற்பித்தார்.

நாற்பது பாடல்களைக் கொண்டு, சீர்மிகு கருத்துக்களால் நீதிகளைப் புகட்டும், எளிமையான சொற்களும், பொருள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழமும் மிக்க இந் 'நல்வழி' என்னும் நூலுஞ் சிறியோர் மட்டுமல்லாமற் பெரியோருங் கற்றுணர வேண்டிய நூல் ஆகும். வாழ்க்கையை நாம் நல்லபடி வாழ இவற்றை மனதில் எடுத்துக் கொண்டு வாழ்ந்தாலே போதும் என்கின்ற அளவிற்குத் தன்னுள்ளே பொருள் பொதிந்த கருத்துக்களைக் கொண்டிலங்கும் இந்நூல், வளரும் இளம் பருவத்தினராகிய அறநெறிப் பாடசாலை மாணவர்கள் அனைவரும் மனங் கொள்ள வேண்டியது அவசியம் ஆகும். இதற்கு மாணவர் களின் பெற்றோர்களும், அறநெறிப் பாடசாலை ஆசிரியர் களும் உந்து சக்தியாக விளங்க வேண்டும் என்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

**அ. உமாமகேஸ்வரன்**
*பணிப்பாளர்.*
*இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஔவையார் வரலாறு



**ஔ**வையார்
என்பதற்குத் தாய் போன்ற
மூத்த பெண்மணி என்னும்
பொருள் உண்டு.
ஔவையார் என்ற
பெயரைத் தமிழ் உலகில்
அறியாதவர் எவரும் இலர்.
ஔவையார் என்ற பெயரிற்
பல பெண்பாற் புலவர்கள்
வாழ்ந்துள்ளார்கள் என
வரலாற்று ஆய்வாளர்கள்
கூறுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கப் புலவர்களுட் பெண்பாற் புலவர்கள் முப்பது பேர் இருந்தார்கள். அவர்களில் ஔவையார் என்பவரும் ஒருவர். பாரி, அதியமான் என்னுந் தலைவர்களோடுஞ் சேர, சோழ, பாண்டியரோடும் பழகியவர். அதியமான் என்னுந் தகடூர் அரசனுடன் மிக இறுக்கமான நட்புப் பூண்டிருந்தார். அதியமானுக்குந் தொண்டைமான் என்ற அரசனுக்கும் பகை மூண்ட போது அதியமானுக்காகத் தூது சென்று போரைத் தடுக்க முயன்றார். ஆயுள் நீட்டிப்புக்காகத் தனக்கு கிடைத்த நெல்லிக் கனியை ஔவையாருக்குக் கொடுத்தவன் அதியமான்.

சங்க காலத்துப் புலவரான ஔவையார் புறநானூற்றிலுந் தொகை நூல்களிலும் ஐம்பத்தொன்பது பாடல்கள் பாடியுள்ளார். இதை விட நாயன்மார்கள் காலத்திலுஞ் சிவபக்தி உடைய ஔவையார் வாழ்ந்தார் என்று வரலாற்றுக் கதை உண்டு. மேலுங் கம்பர், ஒட்டக்கூத்தர் முதலானவர்களின் காலத்தில் வாழ்ந்த ஔவையார் ஒருவர். இவரே தமிழ் இலக்கிய உலகிற் பெரும் புகழ் பெற்றவர். இவரே ஆத்திசூடி முதலான நீதி நூல்களைப் பாடியவர். இவரை விட "ஞானக் குறள்" என்னும் நூல் பாடிய ஔவையாரும் பிறிதொரு நபர் என்றும் வரலாற்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
கணபதி துணை

# ஔவையார் அருளிச் செய்த

# நல்வழி

## மூலமும் உரையும்



### காப்பு

**பாலுந் தெளிதேனும் பாகும் பருப்புமிவை**
**நாலுங் கலந்துனக்கு நான்றருவேன் - கோலஞ்செய்**
**துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீ எனக்குச்**
**சங்கத் தமிழ்மூன்றும் தா.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதவுரை : கோலம்செய் துங்கக் கரி முகத்துத் தூ மணியே - அழகு செய்கின்ற உயர்வாகிய யானை முகத்தையுடைய பரிசுத்த மாகிய இரத்தினம் போலும் விநாயகக் கடவுளே. நான் உனக்குப் பாலுந் தெளிதேனும் பாகும் பருப்பும் இவை நாலுங் கலந்து தருவேன் - அடியேன் உமக்குப் பாலுந் தெளிந்த தேனும் வெல்லப் பாகும் பருப்புமாகிய இந்நான்கையுங் கலந்து நிவேதிப்பேன், நீ எனக்குச் சங்கத் தமிழ் மூன்றும் தா - நீர் அடியேனுக்குச் சங்கத்தில் வளர்க்கப்பட்ட (இயற்றமிழ், இசைத்தமிழ் நாடகத் தமிழ் என்னும்) தமிழ் மூன்றையுந் தந்தருளும் என்றவாறு.

பொருள் : அழகு செய்கின்ற உயர்வாகிய யானை முகத்தையுடைய பரிசுத்தமாகிய இரத்தினம் போலும் விநாயகக் கடவுளே அடியேன் உமக்குப் பாலுந் தெளிந்ததேனும் வெல்லப்பாகும் பருப்புமாகிய இந் நான்கையுங் கலந்து நிவேதிப்பேன், நீர் அடியேனுக்குச் சங்கத்தில் வளர்க்கப்பட்ட தமிழ் மூன்றையுந் தந்தருளும்.

இதனது தாற்பரியம் : விநாயகக் கடவுளுக்குப் பூசை செய்யின் முத்தமிட் புலமையும் உண்டாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**1. புண்ணியமாம் பாவம்போம் போனநாட் செய்தவை**
**மண்ணிற் பிறந்தார்க்கு வைத்தபொருள் - எண்ணுங்கால்**
**ஈதொழிய வேறில்லை யெச்சமயத் தோர்சொல்லும்**
**தீதொழிய நன்மை செயல்**

பதவுரை : புண்ணியம் ஆம் - புண்ணியமே செய்யத்தக்கது, பாவம் போம் - பாவமே ஒழியத்தக்கது, போன நாள் செய்த அவை - முற்பிறப்பிற் செய்த அந்தப் புண்ணிய பாவங்களே, மண்ணிற் பிறந்தார்க்கு வைத்த பொருள் - பூமியிலே பிறந்த மனிதர்களுக்கு (இப்பிறப்பில் இன்பதுன்பங்களை அனுபவித்தற்குக் காரணமாக) வைத்த பொருளாகும். எண்ணுங்கால் எச்சமயத்தோர் சொல்லும் ஈது ஒழிய வேறு இல்லை - ஆராயுமிடத்து எந்தச் சமயத்தார் சொல்வதும் இந்தப் பொருளே அல்லாமல் மற்றொன்றுமில்லை. தீது ஒழிய நன்மை செயல் - (ஆதலினாலே) பாவம் நீங்கப் புண்ணியத்தைச் செய்க என்றவாறு.

பொருள் : புண்ணியமே செய்யத்தக்கது. பாவமே ஒழியத்தக்கது, முற்பிறப்பிற் செய்த அந்தப் புண்ணிய பாவங்களே, பூமியிலே பிறந்த மனிதர்களுக்கு இப்பிறப்பில் இன்பத் துன்பங்களை அனுபவித்தற்குக் காரணமாக வைத்த பொருளாகும். ஆராயுமிடத்து எந்தச் சமயத்தார் சொல்வதும் இந்தப் பொருளே அல்லாமல் மற்றொன்றுமில்லை. ஆதலாற் பாவம் நீங்கப் புண்ணியத்தைச் செய்க.

இதனது தாற்பரியம் : இன்பத்துக் காரணம் புண்ணியமும் துன்பத்துக்குக் காரணம் பாவமுமாதலிற் பாவத்தை ஒழித்துப் புண்ணியத்தைச் செய்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2. சாதி யிரண்டொழிய வேறில்லை சாற்றுங்கால்**
**நீதி வழுவா நெறிமுறையின் - மேதினியில்**
**இட்டார் பெரியோ ரிடாதா ரிழிகுலத்தோர்**
**பட்டாங்கி லுள்ள படி**

பதவுரை: சாற்றுங்கால் மேதினியில் சாதி இரண்டு ஒழிய வேறு இல்லை - சொல்லுமிடத்துப் பூமியிலே (உயர்வாகிய சாதியென்றும் இழிவாகிய சாதியென்றும்) சாதி இரண்டேயல்லாமல் வேறில்லை. (அவ்விரண்டு சாதியரும் யாவரெனின்) நீதிவழுவா நெறி முறையின் இட்டார் பெரியோர் - நீதி தவறாத நல் வழியிலே நின்று கொண்டு முறைமையோடு (சற்பாத்திரங் களாய் உள்ளவர்க்குக்) கொடுத்தவரே உயர்வாகிய சாதியார். இடாதோர் இழி குலத்தோர் - கொடாதவரே இழிவாகிய சாதியார். பட்டாங்கில் உள்ளபடி- உண்மை நூலின் உள்ள கிரமம் (இதுவேயாம்) என்றவாறு.

பொருள் : சொல்லுமிடத்துப் பூமியிலே உயர்வாகிய சாதியென்றும் இழிவாகிய சாதியென்றும் இரண்டேயல்லாமல் வேறில்லை. அவ்விரண்டு சாதியரும் யாவரெனின் நீதி தவறாத நல்வழியிலே நின்று கொண்டு முறைமையோடு சற்பாத்தி ரங்களாய் உள்ளவர்க்குக் கொடுத்தவரே உயர்வாகிய சாதியார். கொடாதவரே இழிவாகிய சாதியார். உண்மை நூலின் உள்ள கிரமம் இதுவேயாம்.

இதனது தாற்பரியம் : சற்பாத்திரத்துக்குக் கொடுத்தவரே உயர்வாகிய சாதியார். கொடாதவரே இழிவாகிய சாதியார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**3. இடும்பைக் கிடும்பை யியலுடம்பி தன்றே**
**இடும்பொய்யை மெய்யென் றிராதே - இடுங்கடுக**
**உண்டாயி னுண்டாகு மூழிற் பெருவலிநோய்**
**விண்டாரைக் கொண்டாடும் வீடு**

பதவுரை : இயல் உடம்பு இது - திரிகின்ற இந்த உடம்பானது. இடும்பைக்கு இடும்பை அன்றே - பல துன்பங்களாகிய சரக்குகளை நிறைத்து வைக்கும் பையன்றோ, இடும் பொய்யை மெய் என்று இராது - (போசனத்தை) இடுகின்ற நிலையில்லாத தாகிய இந்த உடம்பை நிலையுடையதென்று நம்பி இராமல், கடுக இடும் - சீக்கிரம் (சற்பாத்திரங்களாய் உள்ளவர் களுக்குக்) கொடுங்கள், உண்டாயின் - (இத்தருமம் உங்களி டத்து) உண்டாயின், பெருவலி நோய் விண்டாரைக் கொண் டாடும் வீடு - பெரிய வலிமையுடைய மலநோய் நீக்கியவரை மெச்சிக் கொள்கின்ற முத்தியானது. ஊழின் உண்டாகும் - முறையினாலே (உங்களுக்குக்) கிடைக்கும் என்றவாறு.

ஏ – அசை

பொருள் : திரிகின்ற இந்த உடம்பானது பல துன்பங்களாகிய சரக்கு களை நிறைத்து வைக்கும் பையன்றோ! போசனத்தை இடுகின்ற நிலையில்லாதாகிய இந்த உடம்பை நிலையுடைய தென்று நம்பி இராமற் சீக்கிரஞ் சற்பாத்திரங்களாய் உள்ளவர்களுக்குக் கொடுங்கள். இத்தருமம் உங்களிடத்து உண்டாயின் பெரிய வலிமையுடைய மலநோய் நீக்கியவரை மெச்சிக் கொள்கின்ற முத்தியானது. முறையினாலே உங்களுக்குக் கிடைக்கும்.

இதனது தாற்பரியம் : நிலையில்லாத உடம்பு உள்ளபொழுதே சற்பாத் திரத்திலே தானஞ்செய்தவருக்கு, அந்தத் தருமத்தினாலே சற் குருவினது திருவருளும்; அந்தத் திருவருளினாலே ஞானமும்; அந்த ஞானத்தினாலே முத்தியுஞ் சித்திக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**4. எண்ணி யொருகருமம் யார்க்குஞ்செய் யொண்ணாது**
**புண்ணியம் வந்தெய்த போதல்லாற் - கண்ணில்லான்**
**மாங்காய் விழவெறிந்த மாத்திரைக்கோ லொக்குமே**
**ஆங்கால மாகும் மவர்க்கு**

பதவுரை : யார்க்கும் - யாவர்க்காயினும், புண்ணியம் வந்து எய்த போது அல்லால் - (முன்செய்த) புண்ணியம் வந்து கூடிய போதல் லாமல், எண்ணி ஒரு கருமஞ் செய்யொண்ணாது - (மற்றைக் காலத்திலே) நினைத்து ஒரு தொழிலைச் செய்யமுடியாது கண் இல்லான் மாங்காய் விழ எறிந்த மாத்திரைக்கோல் ஒக்கும் - புண்ணியம் வந்து கூடாத அக்காலத்திற் செய்யும் அத்தொழி லானது) கண்ணில்லாதவன் மாங்காய் விழுதற்கு எறிந்த மாத்திரைக் கோலைப் போலும், ஆம் காலம் அவர்க்கு ஆகும் - (புண்ணியம் வந்து) கூடியபோது அவருக்கு (அத்தொழில் தானே) முடியும் என்றவாறு.

ஏ - அசை.

பொருள் : யாவர்க்காயினும் முன்செய்த புண்ணியம் வந்து கூடிய போதல்லாமல் மற்றைக் காலத்திலே நினைத்து ஒரு தொழிலைச் செய்ய முடியாது. புண்ணியம் வந்து கூடாத அக்காலத்திற் செய்யும் அத்தொழிலானது கண்ணில்லாதவன் மாங்காய் விழுதற்கு எறிந்த மாத்திரைக் கோலைப் போலும். புண்ணியம் வந்து கூடியபோது அவருக்கு அத்தொழில் தானே முடியும்.

இதனது தாற்பரியம்: புண்ணியமில்லாதவன் எண்ணியதொழிலும் முடியப்பெறாத கைப்பொருளும் இழப்பன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**5. வருந்தி யழைத்தாலும் வாராது வாரா**
**பொருந்துவன போமினென்றாற் போகா - இருந்தேங்கி**
**நெஞ்சம்புண் ணாக நெடுந்தூரம் தாணினைந்து**
**துஞ்சுவதே மாந்தர் தொழில்**

பதவுரை : வாராத வருந்தி அழைத்தாலும் வாரா - (தமக்கு) வாராதவைகள் வருந்தி அழைத்தாலும் வாராவாம். பொருந்துவன போமின் என்றாற் போகா - (தமக்கு) வருமவைகள் போமின் என்று வெறுத்தாலும் போகாவாம், இருந்து ஏங்கி (இவ்வுண்மையை அறியாமல்) இருந்து கொண்டு ஏக்கமுற்று, நெஞ்சம் புண் ஆகத் தாம் நெடுந்தூரம் நினைந்து துஞ்சுவதே - மனம் புண்ணாகும்படி (அவைகளைத்) தாங்கள் நெடுந்தூரம் நினைந்து மாண்டு போவதே. மாந்தர் தொழில் - மனிதருடைய தொழிலாகும் என்றவாறு.

பொருள் : தமக்கு வாராதவைகள் வருந்தி அழைத்தாலும் வாராவாம். தமக்கு வருமவைகள் போமின் என்று வெறுத்தாலும் போகாவாம். இவ்வுண்மையை அறியாமல் இருந்து கொண்டு ஏக்கமுற்று மனம் புண்ணாகும் படி அவைகளைத் தாங்கள் நெடுந்தூரம் நினைந்து மாண்டுபோவதே மனிதருடைய தொழிலாகும்.

இதனது தாற்பரியம்: இருவினைகளைச் செய்தவர் அவற்றின் பயன்களாகிய இன்பத்துன்பங்களை அனுபவிப்பது தப்பாதாதலின், அவற்றின் பொருட்டுக் கவலையுற்று வாழ்நாளை வீணாட் போக்குதல் அறியாமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**6. உள்ள தொழிய வொருவர்க் கொருவர்சுகங்**
**கொள்ளக் கிடையா குவலயத்தில் - வெள்ளக்**
**கடலோடி மீண்டு கரையேறி னாலென்**
**உடலோடு வாழு முயிர்க்கு**

பதவுரை : ஒருவர்க்கு உள்ளது ஒழிய - ஒருவருக்கு (ஊழினால்) உள்ள தல்லாமல், ஒருவர் சுகங் கொள்ளக்கிடையா - மற்றொரு வருடைய சுகங்கள் அனுபவிக்க விரும்பினால் அவை கிடையாவாம். (ஆதலினால்) குவலயத்தில் - இப்பூமியிலே, உடலோடு வாழும் உயிர்க்கு - உடம்புகளோடு கூடிவாழும் உயிர்களுக்கு, வெள்ளக்கடல் ஓடி மீண்டு கரை ஏறினால் என் - வெள்ளை நீரையுடைய சமுத்திரத்திலே (கப்பலின் மேற்) சென்று சம்பாதித்துக் கொண்டு திரும்பி வந்து கரை யேறினாலும் அதனாற் பயன் யாது? என்றவாறு.

பொருள் : ஒருவருக்கு ஊழினால் உள்ளதல்லாமல் மற்றொருவருடைய சுகங்கள் அனுபவிக்க விரும்பினால் அவை கிடையாவாம். ஆதலினால் இப்பூமியிலே, உடம்புகளோடு கூடி வாழும் உயிர்களுக்கு, வெள்ளை நீரையுடைய சமுத்தி ரத்திலே கப்பலின் மேற்சென்று சம்பாதித்துக் கொண்டு திரும்பி வந்து கரையேறினாலும் அதனாற் பயன் யாது?

இதனது தாற்பரியம்: பெருமுயற்சி செய்து பெரும் பொருள் சம்பாதித் தாலும், ஊழினளவன்றி அதிகமாக அனுபவித்தல் கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. எல்லாப் படியாலு மெண்ணினா லிவ்வுடம்பு
பொல்லாப் புழுமலிநோய்ப் புன்குரம்பை - நல்லார்
அறிந்திருப்பா ராதலினா லாங்கமல நீர்போற்
பிறிந்திருப்பார் பேசார் பிறர்க்கு

பதவுரை : எல்லாப் படியாலும் எண்ணினால் - சகல விதங்களினாலும் ஆராயுமிடத்து, இவ்வுடம்பு பொல்லாப் புழுமலி நோய்ப் புல் குரம்பை - இந்தச் சரீரம் பொல்லாத புழுக்களுக்கும் நிறைந்த வியாதிகளுக்கும் புல்லிய ஒரு சிறு வீடாக இருக்கின்றது. நல்லார் அறிந்து இருப்பார் - நல்லறிவினோர்கள் (இவ்வுடம் பினிழிவை) அறிந்திருப்பார்கள். ஆதலினாலாங் கமலநீர் போல் பிரிந்து இருப்பார் - ஆகையால் அவர்கள் தாமரையி லையில் நீர்போல (இவ்வுடம்பிலே கூடியிருந்தும்) கூடாதிருப் பார்கள், பிறர்க்குப் பேசார் - (பயன்படாமையால்) பிறருக்கு (அந்த நிலையைச்) சொல்லார்கள். என்றவாறு.

ஆம் - அசை.

பொருள் : சகல விதங்களினாலும் ஆராயுமிடத்து இந்தச் சரீரம் பொல்லாத புழுக்களுக்கும் நிறைந்த வியாதிகளுக்கும் புல்லிய ஒரு சிறு வீடாக இருக்கின்றது. நல்லறிவினோர்கள் இவ்வுடம்பின் இழிவை அறிந்திருப்பார்கள். ஆகையால் அவர்கள் தாமரையிலையில் நீர் போல இவ்வுடம்பிலே கூடியிருந்துங் கூடா திருப்பார்கள். பிறருக்கு அந்த நிலையைச் சொல்லார்கள்.

இதனது தாற்பரியம்: உடம்பு வேறு, தாம் வேறு என்று அறிந்த ஞானிகள் உடம்போடு கூடியிருப்பினும் பற்றற்றிருப்பார்கள்; ஆதலால் அவர்களுக்குத் துன்பமே இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**8. ஈட்டும் பொருண் முயற்சி யெண்ணிறந்த வாயினுமூழ்**
**கூட்டும் படியன்றிக் கூடாவாந் - தேட்ட**
**மரியாதை காணு மகிதலத்தீர் கேண்மின்**
**தரியாது காணுந் தனம்**

பதவுரை : மகிதலத்தீர் கேண்மின் - பூமியிலுள்ள மனிதர்களே கேளுங்கள், ஈட்டும் பொருள் - தேடுதற்குரிய பொருள்களானவை, முயற்சி எண் இறந்த ஆயினும் - முயற்சிகள் அளவில்லாதன வாயினும், ஊழ் கூட்டும்படி அன்றிக் கூடாவாம் - ஊழ் கூட்டு மளவினல்லாமற் சேராவாம். தனம் தரியாது - (ஊழினாலே சேரினும்) அப்பொருள் நிலைபெறாது, தேட்டம் மரியாதை - (ஆதலினால்) நீங்கள் தேடத்தகுவது மரியாதையேயாம். என்றவாறு.

மரியாதை - நன்னெறியினிற்றல், ஆம் - அசை, காணும் இரண்டும் முன்னிலையசை.

பொருள் : பூமியிலுள்ள மனிதர்களே! கேளுங்கள், தேடுதற்குரிய பொருள்களானவை, முயற்சிகள் அளவில்லாதவனவாயினும், ஊழ் கூட்டுமளவினல்லாமற் சேராவாம். ஊழினாலே சேரினும் அப்பொருள் நிலை பெறாது, ஆதலினால் நீங்கள் தேடத்த குவது மரியாதையேயாம் என்பதாம்.

இதனது தாற்பரியம்: பொருள் ஊழினளவின்றி வாராமையானும் வந்த பொருளும் நிலைபெறாமையானும் நிலைபெறுவதாகிய நல்லொழுக்கத்தையே தேடல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**9. ஆற்றுப் பெருக்கற் றடிசுடுமந் நாளுமவ்வா**
**றூற்றப் பெருக்கா லுலகூட்டும் - ஏற்றவர்க்கு**
**நல்ல குடிப்பிறந்தார் நல்கூர்ந்தா ரானாலும்**
**இல்லையென மாட்டா ரிசைந்து**

பதவுரை : ஆற்றுப்பெருக்கு அற்று - ஆற்றில் வெள்ளம் வற்றிப்போய், அடி சுடும் அந்நாளும் - (மணலானது வெய்யிலினாலே காய்ந்து நடப்பவருடைய) அடியைச் சுடுகின்ற அக்காலத்திலும், அவ்வாறு ஊற்றுப் பெருக்கால் உலகு ஊட்டும் - அந்த ஆறானது ஊற்றுநீர்ப் பெருக்கினால் உலகத்தாரை உண்பிக்கும், (அதுபோல) நல்ல குடிப்பிறந்தார் - நல்ல குடியிலே பிறந்தவர், நல் கூர்ந்தார் ஆனாலும் - வறுமை அடைந்த காலத்திலும், ஏற்றவர்க்கு இசைந்து இல்லையெனமாட்டார் - இரந்தவருக்கு (கருத்து) இசைந்து இல்லையென்று சொல்ல மாட்டாது கொடுப்பார் என்றவாறு.

பொருள் : ஆற்றில் வெள்ளம் வற்றிப்போய் மணலானது வெய்யிலினாலே காய்ந்து நடப்பவருடைய அடியைச் சுடுகின்ற அக்காலத்திலும் அந்த ஆறானது ஊற்று நீர்ப் பெருக்கினால் உலகத்தாரை உண்பிக்கும். அதுபோல நல்ல குடியிலே பிறந்தவர் வறுமை அடைந்த காலத்திலும் இரந்தவருக்குக் கருத்து இசைந்து இல்லையென்று சொல்லமாட்டாது கொடுப்பார்.

இதனது தாற்பரியம் : உயர்ந்த குடியிற் பிறந்தவர் வறுமைக் காலத்திலும் இரந்தவருக்குக் கொடாதுவிடார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**10. ஆண்டாண்டு தோறு மழுது புரண்டாலு**
**மாண்டார் வருவரோ மாநிலத்தீர் - வேண்டா**
**நமக்கு மதுவழியே நாம்போ மளவும்**
**எமக்கென்னென் றிட்டுண் டிரும்**

பதவுரை : மாநிலத்தீர் - பெரிய பூமியிலுள்ள மனிதர்களே ஆண்டு ஆண்டு தோறும் அழுது புரண்டாலும் - (இறந்த) அவ்விடத்தில் வருடந்தோறும் அழுது புரண்டாலும், மாண்டார் வருவரோ - இறந்தவர் திரும்பி வருவரோ? (வரமாட்டார்.) வேண்டா - (ஆதலினால் அழ) வேண்டுவதில்லை. நமக்கும் அது வழியே நாம் போம் அளவும் எமக்கு என் என்று - நமக்கும் அம்மரணமே வழியாகும். நாம் இறந்து போமளவும் எமக்கு யாது சம்பந்தம் என்று, இட்டு உண்டு இரும் - பிசைஷயிட்டு (நீங்களும்) உண்டு (கவலையற்று) இருங்கள் என்றவாறு.

பொருள் : பெரிய பூமியிலுள்ள மனிதர்களே! இறந்த அவ்விடத்தில் வருடந்தோறும் அழுது புரண்டாலும், இறந்தவர் திரும்பி வருவரோ? வரமாட்டார். ஆதலினால் அழ வேண்டுவதில்லை. நமக்கும் அம்மரணமே வழியாகும். நாம் இறந்து போமளவும் எமக்கு யாது சம்பந்தம் என்று பிசைஷயிட்டு நீங்களும் உண்டு கவலையற்று இருங்கள்.

இதனது தாற்பரியம் : இறந்தவர் பொருட்டு அழுகையினால் உடம்பிற்குத் தளர்ச்சியும் உயிருக்கு வருத்தமும் உண்டாமேயன்றிச் சிறிதும் பயனில்லாமையாற் கவலையையொழித்துச் சற்பாத் திரத்துக்குக் கொடுத்து வாழ்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**11. ஒருநா ளுணவை யொழியென்றால் லொழியாய்**
**இருநாளுக்கு கேலென்றா லேலாய் - ஒரு நாளும்**
**என்னோ வறியா யிடும்பைகூ ரென்வயிறே**
**உன்னோடு வாழ்த லரிது**

பதவுரை : இடும்பைகூர் என் வயிறே - துன்பம் மிகுகின்ற என்னுடைய வயிறே, ஒரு நாள் உணவை ஒழி என்றால் ஒழியாய் - (கிடையாத போது) ஒரு நாளுக்குப் போசனத்தை விட்டிரு என்றால் விட்டிராய், இரு நாளுக்கு ஏல் என்றால் ஏலாய் - (கிடைத்தபோது) இரண்டு நாளுக்கு (உண்ணும் போசனத்தை ஒருங்கு) ஏற்றுக்கொள்ளென்றால் ஏற்றுக்கொள்ளாய். ஒரு நாளும் என் நோ அறியாய் - ஒரு நாளிலாயினும் என்னுடைய வருத்தத்தை அறியாய், உன்னோடு வாழ்தல் அரிது - (ஆதலி னால்) ஆதலினால் உன்னோடு கூடி வாழ்தல் (எனக்கு) அருமையாக இருக்கின்றது என்றவாறு.

பொருள் : துன்பம் மிகுகின்ற என்னுடைய வயிறே! கிடையாத போது ஒரு நாளுக்குப் போசனத்தை விட்டிரு என்றால் விட்டிராய், கிடைத்த போது இரண்டு நாளுக்கு உண்ணும் போசனத்தை ஒருங்கு ஏற்றுக்கொள்ளென்றால் ஏற்றுக்கொள்ளாய். ஒரு நாளிலாயினும் என்னுடைய வருத்தத்தை அறியாய் ஆதலினால் உன்னோடு கூடி வாழ்தல் எனக்கு அருமையாக இருக்கின்றது.

இதனது தாற்பரியம் : வயிற்றுக்குத் திருப்தி செய்தலினும் அரியது பிறிதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**12. ஆற்றங் கரையின் மரமு மரசறிய**
**வீற்றிருந்த வாழ்வும் விழுமன்றே - ஏற்றம்**
**உழுதுண்டு வாழ்வதற் கொப்பில்லை கண்டீர்**
**பழுதுண்டு வேறோர் பணிக்கு**

பதவுரை : ஆறு அம் கரையில் மரமும் - ஆற்றினது கரையில் இருக்கின்ற மரமும், அரசு அறிய வீற்று இருந்த வாழ்வும் விழும் அன்றே - அரசன் அறிய (அதிகாரஞ் செய்து சம்பாதித்துப்) பெருமை யாக வாழ்கின்ற வாழ்க்கையும் அழிந்து போமன்றோ, உழுது உண்டு வாழ்வு ஏற்றம் - (ஆதலினால்) உழுது பயிர் செய்து உண்டு வாழ்வதே உயர்வாகும், அதற்கு ஒப்பு இல்லை - அதற்குச் சமானம் இல்லை, வேறு ஓர் பணிக்குப் பழுது உண்டு - மற்றைத் தொழில் வாழ்க்கைகளுக்கெல்லாம் அழிவு உண்டு என்றவாறு.

அம் - சாரியை, கண்டீர் - முன்னிலையசை

பொருள் : ஆற்றினது கரையில் இருக்கின்ற மரமும் அரசன் அறிய அதிகாரஞ் செய்து சம்பாதித்துப் பெருமையாக வாழ்கின்ற வாழ்க்கையும் அழிந்து போமன்றோ! ஆதலினால் உழுது பயிர் செய்து உண்டு வாழ்வதே உயர்வாகும். அதற்குச் சமானம் இல்லை. மற்றைத் தொழில் வாழ்க்கைகளுக் கெல்லாம் அழிவு உண்டு.

இதனது தாற்பரியம் : பிறர்வயத்தினராகாது தம்வயத்தினராய் நின்று செய்யும் வேளாண்மையாலாகிய வாழ்க்கைக்கு அழிவு இல்லாமையால் அதுவே சிறந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**13. ஆவாரை யாரே யழிப்பா ரதுவன்றிச்**
**சாவாரை யாரே தவிர்ப்பவர் - ஓவாமல்**
**ஐயம் புகுவாரை யாரே விலக்குவார்**
**மெய்யம் புவியதன் மேல்**

பதவுரை : அம் புவியதன் மேல் - அழகிய பூமியின் மேலே, ஆவாரை ஆழிப்பார் யார் - (நல்வினையினால்) நெடுங்கால் உயிர் வாழ்வதற்கு உரியவரை (இடையிலே) அழிக்க வல்லவர் யாவர்? அது அன்றிச் சாவாரைத் தவிர்ப்பவர் யார்? - அதுவல் லாமலும் (தீவினையினால்) இறத்தற்கு உரியவரை நிறுத்த வல்லவர் யாவர்? ஓவாமல் ஐயம் புகுவாரை விலக்குவார் யார்? - (செல்வம் இழந்து) ஒழியாமல் பிகைூஷிக்குச் செல்வோரைத் தடுக்கவல்லவர் யாவர்? மெய் - (இது) சத்தியமேயாம் என்றவாறு.

ஏ - மூன்றும் அசை

பொருள் : அழகிய பூமியின் மேலே, நல்வினையினால் நெடுங்கால் உயிர் வாழ்வதற்கு உரியவரை இடையிலே அழிக்க வல்லவர் யாவர்? அதுவல்லாமலுந் தீவினையினால் இறத்தற்கு உரியவரை நிறுத்த வல்லவர் யாவர்? செல்வம் இழந்து ஒழியாமற் பிகைூஷிக்குச் செல்வோரைத் தடுக்கவல்லவர் யாவர்? இது சத்தியமேயாம்.

இதனது தாற்பரியம் : ஊழினால் அடைதற்பாலனவாகிய ஆக்கக் கேடுகளைத் தவிர்க்க வல்லவர் ஒருவரும் இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**14. பிச்சைக்கு மூத்த குடிவாழ்க்கை பேசுங்கால்**
**இச்சைபல சொல்லி யிடித்துண்கை - *சீச்சீ***
**வயிறு வளர்க்கைக்கு மான மழியா**
**துயிர்விடுகை சால வுறும்**

பதவுரை : பேசுங்கால் - ஆராய்ந்து சொல்லுமிடத்து, பிச்சைக்கு மூத்த குடிவாழ்க்கை - பிக்ஷை எடுத்து உண்டலினும் (இழிவிற்) பெரிய குடிவாழ்க்கையாவது, பல இச்சை சொல்லி இடித்து உண்கை - பலவாகிய இச்சைகளைப் பேசி (ஒருவரை) நெருக்கி வாங்கி உண்ணுதலாம், *சீச்சீ* - *சீசீ*, (இது என்ன செய்கை!) வயிறு வளர்க்கைக்கு மானம் அழியாது - வயிற்றை வளர்த்தற் பொருட்டு மானங் கெடாமல், உயிர்விடுகை சால உறும் - உயிரை விடுதலே மிக (உயர்ச்சியைப்) பொருந்தும். என்றவாறு

பொருள் : ஆராய்ந்து சொல்லுமிடத்து, பிக்ஷை எடுத்து உண்டலினும் இழிவிற் பெரிய குடிவாழ்க்கையாவது, பலவாகிய இச்சை களைப் பேசி ஒருவரை நெருக்கி வாங்கி உண்ணுதலாம், சீசீ, இது என்ன செய்கை! வயிற்றை வளர்த்தற் பொருட்டு மானங் கெடாமல், உயிரை விடுதலே மிக (உயர்ச்சியைப்) பொருந்தும்.

இதனது தாற்பரியம் : பிறரிடத்தே இச்சை பேசி வாங்கி உண்டு மானம் இழந்து உயிர் வாழ்தலினும் உயிரை விட்டு மானத்தை நிறுத்துதலே உயர்வுடைத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**15. சிவாய நமவென்று சிந்தித் திருப்போர்க்**
**கபாய மொருநாளு மில்லை - உபாயம்**
**இதுவே மதியாகு மல்லாத வெல்லாம்**
**விதியே மதியாய் விடும்**

பதவுரை : சிவாயநம என்று சிந்தித்து இருப்போர்க்கு - சிவாயநமவென்று தியானித்துக் கொண்டிருப்பவருக்கு, ஒரு நாளும் அபாயம் இல்லை - ஒரு நாளாயினும் இடுக்கண் உண்டாகாது. இதுவே உபாயம் - (விதியை வெல்லுதற்கு) இதுவே உபாயமாகும். இதுவே மதி ஆகும் - (ஆதலின்) இதுவே (உண்மையாகிய) அறிவாகும், அல்லாத எல்லாம் மதிவதியே ஆய்விடும் - (இச்சிவத்தியானம்) அல்லாத மற்றையிடங்களினெல்லாம் புத்தியானது விதியின் வசத்தேயாகிவிடும் என்றவாறு.

இதுவே என்பது பின்னுங் கூட்டப்பட்டது.

பொருள் : சிவாயநமவென்று தியானித்துக் கொண்டிருப்பவருக்கு ஒரு நாளாயினும் இடுக்கண் உண்டாகாது. விதியை வெல்வதற்கு இதுவே உபாயமாகும். ஆதலின் இதுவே உண்மையான அறிவாகும், இச் சிவத்தியானம் அல்லாத மற்றையிடங்களினெல்லாம் புத்தியானது விதியின் வசத்தேயாகிவிடும்.

இதனது தாற்பரியம் : சிவத்தியானமுடையவருக்கு விதி இல்லை; சிவத்தியான மில்லாதவருக்கு விதி உண்டு என்பதாம்.

இடையறாத சிவத்தியானமுடையவர் அச்சிவத்தையேயன்றிப் பிறிதொன்றையும் அறியாராதலின், அவர் சரீரம் முகந்து கொண்ட சுகதுக்கமென்னும் பிரார்த்த கருமம் அவருக்குப் புசிப்பாகாமல், அவருடற் புசிப்பாய் ஒழியும் என்பதே அவருக்கு விதியில்லை யென்பதற்குக் கருத்து, அது திருநாவுக்கரசு நாயனார் முதலிய மெய்ஞ்ஞானிகள் சரித்திரங் களாலும் அறிக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**16. தண்ணீர் நிலநலத்தாற் றக்கோர் குணங்கொடையாற்**
**கண்ணீர்மை மாறாக் கருணையாற் - பெண்ணீர்மை**
**கற்பழியா வாற்றாற் கடல்சூழ்ந்த வையகத்துள்**
**அற்புதமா மென்றே யறி**

பதவுரை : தண்ணீர் நில நலத்தால் - தண்ணீராவது நிலத்தினது நன்மையினாலும், தக்கோர் குணங் கொடையால் - நல்லோருடைய குணமானது கொடையினாலும், கண் நீர்மை மாறாக் கருணையால் - கண்களுடைய குணமானது நீங்காத அருளினாலும், பெண் நீர்மை கற்பு அழியா ஆற்றால் - பெண்களுடைய குணமானது கற்பு நிலை கெடாத வழியினாலும், கடல் சூழ்ந்த வையகத்துள் அற்புதம் ஆம் என்றே அறி - சமுத்திரஞ் சூழ்ந்த பூமியினிடத்து (எல்லாரும்) ஆச்சரியப்படத்தக்க வைகளாகும் என்று நீ அறிவாயாக என்றவாறு.

பொருள்: தண்ணீராவது நிலத்தினது நன்மையினாலும், நல்லோருடைய குணமானது கொடையினாலுங் கண்களுடைய குணமானது நீங்காத அருளினாலும் பெண்களுடைய குணமானது கற்பு நிலை கெடாத வழியினாலுஞ் சமுத்திரஞ் சூழ்ந்த பூமியினிடத்து எல்லோரும் ஆச்சரியப்படத்தக்கவைகளாகும் என்று நீ அறிவாயாக.

இதனது தாற்பரியம் : நில நன்மையினாலே தண்ணீருக்குங் கொடையினாலே நல்லோருக்கும் அருளினாலே கண்களுக்குங் கற்பினாலே பெண்களுக்கும் பெருமை உண்டாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**17. செய்தீ வினையிருக்கத் தெய்வத்தை நொந்தக்கால்**
**எய்த வருமோ விருநிதியம்? - வையத்**
**தறும்பாவ மென்னவறிந் தன்றிடார்க் கின்று**
**வெறும்பானை பொங்குமோ மேல்**

பதவுரை : வையத்துப் பாவம் அறும் என்ன அறிந்து - பூமியிலே (சற்பாத்திரத்திற் செய்யப்படுந் தானத்தினாலே) பாவம் நீங்கும் என்று உணர்ந்து, அன்று இடார்க்கு - அக்காலத்திலே (சற்பாத்திரத்திலே) தானஞ்செய்யாதவருக்கு, செய் தீவினை இருக்க - செய்த அப்பாவம் (வறுமைக்கு வித்தாய்) இருக்க, இன்று தெய்வத்தை நொந்தக்கால் - இப்பொழுது கடவுளை வெறுத்தால், இரு நிதியம் எய்த வருமோ? - பெரிய திரவியம் பொருந்த வருமோ? (வராது) வெறும் பானை மேல் பொங்குமோ? - வெறும் பானை (அடுப்பிலே வைத்து எரித் தால்) மேலே பொங்குமோ? - பொங்காது என்றவாறு.

பொருள்: பூமியிலே சற்பாத்திரத்திற் செய்யப்படுந் தானத்தினாலே பாவம் நீங்கும் என்று உணர்ந்து அக் காலத்திலே சற்பாத்திரத்திலே தானஞ்செய்யாதவருக்கு, செய்த அப் பாவம் வறுமைக்கு வித்தாய் இருக்க, இப்பொழுது கடவுளை வெறுத்தால், பெரிய திரவியம் பொருந்த வருமோ? வராது. வெறும் பானையை - அடுப்பிலே வைத்து எரித்தால் மேலே பொங்குமோ? பொங்காது.

இதனது தாற்பரியம் : வறியவர் அவ்வறுமைக்கு வித்தாகிய தீவினையைச் செய்த தம்மை நோவாது தெய்வத்ததை நோதலிற் பயன் இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**18. பெற்றார் பிறந்தார் பெருநாட்டார் பேருலகில்**
**உற்றா ருகந்தா ரெனவேண்டார் - மற்றோர்**
**இரணங் கொடுத்த லிடுவ ரிடாரே**
**சரணங் கொடுத்தாலுந் தாம்**

பதவுரை : பேர் உலகில் - பெரிய பூமியிலே, பெற்றார் (என) - (இவர் எம்மைப்) பெற்றவர் என்றும், பிறந்தார் (என) - (இவர் எமக்குப்) பிறந்தவர் என்றும், பெருநாட்டார் (என) - (இவர் எம்முடைய) பெரிய தேசத்தார் என்றும், உற்றார் (என) - (இவர் எம்முடைய) சுற்றத்தார் என்றும், உகந்தர் (என) - (இவர் எம்மைச்) சிநேகித்தவர் என்றும், வேண்டார் - விரும்பாதவராகிய உலோபிகள், மற்றோர் இரணம் கொடுத்தால் இடுவர் - அந்நியரேயாயினும் (தம்முடம்பிலே) காயத்தைச் செய்தவராயின், (அவருக்கு எல்லாங்) கொடுப்பர், சரணங் கொடுத்தாலும் இடார் - (முன் சொல்லப்பட்டவர்) அடைக்கலம் புகுந்தவராயினும் (அவருக்கு) ஒன்றுங்கொடார் என்றவாறு.

தாம், ஏ - இரண்டும் அசை.

பொருள் : இவர் எம்மைப் பெற்றவர் என்றும் இவர் எமக்குப் பிறந்தவர் என்றும் பெரிய தேசத்தார் என்றும் (இவர் எம்முடைய) சுற்றத்தார் என்றும் இவர் எம்முடைய சிநேகித்தவர் என்றும் விரும்பாதவராகிய உலோபிகள் அந்நியரேயாயினுங் காயத்தைச் செய்தவராயின் அவருக்கு எல்லாங் கொடுப்பர், முன் சொல்லப்பட்டவர் அடைக்கலம் புகுந்தவராயினும் அவருக்கு ஒன்றுங்கொடார்.

இதனது தாற்பரியம் : உலோபிகள் தமக்கு அகிதத்தைத் தீமை செய்யுங் கள்வர் முதலாயினோருக்கன்றி இதத்தைச் செய்யுந் தாய், தந்தை முதலாயினோருக்குக் கொடார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**19. சேவித்துஞ் சென்றிரந்துந் தெண்ணீர்க் கடல் கடந்தும்**
**பாவித்தும் பாராண்டும் பாட்டிசைத்தும் - போவிப்பம்**
**பாழி னுடம்பை வயிற்றின் கொடுமையால்**
**நாழி யரிசிக்கே நாம்**

பதவுரை : வயிற்றின் கொடுமையால் - வயிற்றினுடைய (பசிக்) கொடுமையினாலே, சேவித்தும் - (பிறரைச்) சேவித்தும், சென்று இரந்தும் - (பலரிடத்தே) போய் யாசித்தும், தெள்நீர்க் கடல் கடந்தும் - தெளிவாகிய நீரையுடைய சமுத்திரத்தைக் (கப்பலேறிக்) கடந்தும், பாவித்தும் - (ஒருவரைப் பெரியவராகப்) பாவித்தும், பார் ஆண்டும் - பூமியை ஆண்டும், பாட்டு இசைத்தும் - (செல்வரைப் புகழ்ந்து) பாட்டுப்பாடியும், நாம் உடம்பை நாழி அரிசிக்கே பாழின் போவிப்பம் - நாம் இந்தச் சரீரத்தை நாழி யரிசிக்காகவே செலுத்துகின்றோம் என்றவாறு.

பொருள் : வயிற்றினுடைய பசிக் கொடுமையினாலே சேவித்தும் பலரிடத்தே போய் யாசித்தும் தெளிவாகிய நீரையுடைய சமுத்திரத்தைக் கப்பலேறிக் கடந்தும் ஒருவரைப் பெரிய வராகப் பாவித்தும், பூமியை ஆண்டுஞ் செல்வரைப் புகழ்ந்து பாட்டுப் பாடியும் நாம் இந்தச் சரீரத்தை நாழியரிசிக்காகவே செலுத்துகின்றோம்.

இதனது தாற்பரியம் : முத்திக்குரிய சாதனத்தைத் தேடும் பொருட்டு அரிதாகக் கிடைத்த சரீரத்தை அதற்குக் கொடுக்கப்படுங் கூலியாகிய போசனத்தைத் தேடும் பொருட்டே முழுமையுஞ் செலுத்துதலின் மிக்க பேதைமை பிறிதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**20. அம்மி துணையாக வாறிழிந்த வாறொக்குங்**
**கொம்மை முலைபகர்வார்க் கொண்டாட்டம் - இம்மை**
**மறுமைக்கும் நன்றன்று மாநிதியம் போக்கி**
**வறுமைக்கும் வித்தாய் விடும்.**

பதவுரை : கொம்மை முலை பகர்வார்க் கொண்டாட்டம் - குவிவாகிய தனங்களை விற்கின்ற பரத்தையரைக் கொண்டாடுதல், அம்மி துணை ஆக ஆறு இழிந்த ஆறு ஒக்கும் - அம்மிக் கல்லே துணையாக ஆற்று வெள்ளத்தில் இறங்கிய தன்மையைப் போலும், (அன்றியும்) மாநிதியம் போக்கி வெறுமைக்கு வித்து ஆய்விடும் - (அது) பெரிய செல்வத்தை அழித்து வறுமைக்குக் காரணமாய் விடும், இம்மை மறுமைக்கு நன்று அன்று - (ஆதலினால்) அது இப்பிறப்பிற்கும் வருபிறப்பிற்கும் நல்ல தாகாது என்றவாறு.

பகர்தல் - விற்றல்

ஓடத்தினாலே கடக்கத்தக்க ஆற்றை அம்மியினாலே கடக்கப் புகுந்தவன் அமிழ்ந்து உயிரை இழத்தல் போல மனைவி யினாலே அனுபவிக்கத்தக்க காமவின்பத்தை வேசையினாலே அனுபவிக்கப் புகுந்தவன் மேகநோயால் வருந்தி உயிரை இழப்பன். ஆதலின் அம்மி துணையாக வாறிழிந்தவாறொக்கு மென்றார்.

பொருள் : குவிவாகிய தனங்களை விற்கின்ற பரத்தையரைக் கொண் டாடுதல், அம்மிக்கல்லே துணையாக ஆற்று வெள்ளத்தில் இறங்கிய தன்மையைப் போலும்; அன்றியும் அது பெரிய செல்வத்தை அழித்து வறுமைக்குக் காரணமாய் விடும், ஆதலினால் அது இப் பிறப்பிற்கும் வருபிறப்பிற்கும் நல்லதாகாது.

இதனது தாற்பரியம் : வேசையைப் புணர்ந்தவன் கைப்பொருளை இழந்து மேகநோயால் வருத்தமுற்றுப் பழி பாவங்களை அடைவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**21. நீரு நிழலு நிலம் பொதியு நெற் கட்டும்**
**பேரும் புகழும் பெருவாழ்வும் - ஊரும்**
**வருந்திருவும் வாழ்நாளும் வஞ்சமிலார்க் கென்றுந்**
**தருஞ் சிவந்த தாமரையா டான்**

பதவுரை : சிவந்த தாமரையாள் - செந்தாமரை மலரில் இருக்கின்ற சீதேவியானவள், வஞ்சம் இலார்க்கு - வஞ்சனை இல்லாத வருக்கு, நீரும் - நீர்வளத்தையும், நிழலும் - நிழல் வளத்தையும், நிலம் பொதியும் நெற்கட்டும் - நிலத்திலே நிறையும் நெற்போரையும், பேரும் - பேரையும், புகழும் - கீர்த்தியையும், பெருவாழ்வும் - பெரிய வாழ்வையும், ஊரும் - கிராமத்தையும், வரும் திருவும் - வளர்கின்ற செல்வத்தையும், வாழ்நாளும் - நிறைந்த ஆயுளையும், என்றும் தரும் - எந்நாளுங் கொடுத்தருளுவள் என்றவாறு.

தான் - அசை

பொருள் : செந்தாமரை மலரில் இருக்கின்ற சீதேவியானவள் வஞ்சனை இல்லாதவருக்கு நீர்வளத்தையும் நிழல் வளத்தையும் நிலத்திலே நிறையும் நெற்போரையும் பேரையுங் கீர்த்தி யையும் பெரிய வாழ்வையுங் கிராமத்தையும் வளர்கின்ற செல்வத்தையும் நிறைந்த ஆயுளையும் எந்நாளும் கொடுத் தருளுவள்.

இதனது தாற்பரியம் : வஞ்சனை செய்யாதவருக்குச் சீதேவியினது திருவருளினாலே எல்லா நலமும் உண்டாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**22. பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்துவைத்துக்**
**கேடு கெட்ட மானிடரே கேளுங்கள் - கூடுவிட்டிங்**
**காவிதான் போயினபின் யாரே யநுபவிப்பார்**
**பாவிகா ளந்தப் பணம்**

பதவுரை : பணத்தைப் பாடுபட்டுத் தேடிப் புதைத்து வைத்து - பணத்தைப் பிரயாசப்பட்டுச் சம்பாதித்து (நீங்களும் உண்ணாமற் பிறருக்குங் கொடாமற் பூமியிலே) புதைத்து வைத்து, கேடு கெட்ட மானுடரே கேளுங்கள் - அப்பொருட்கேட்டினால் (சரீர சுகத்தையும் ஆன்மசுகத்தையும் ஒருங்கு) இழந்த மனிதர்களே (நான் சொல்வதைக்) கேளுங்கள், ஆவி கூடுவிட்டுப் போயின பின்பு - ஆன்மா சரீரத்தை விட்டு நீங்கிய பின்பு, பாவிகாள் அந்தப் பணம் இங்கு ஆர் அநுபவிப்பார் - பாவிகளே! அந்தப் பணத்தை இவ்விடத்து யாவர் அநுபவிப்பார்? என்றவாறு.

தான், எ - இரண்டும் அசை

பொருள் : பணத்தைப் பிரயாசப்பட்டுச் சம்பாதித்து நீங்களும் உண்ணாமற் பிறருக்குங் கொடாமற் பூமியிலே அப்பொருட் கேட்டினாற் சரீர சுகத்தையும் ஆன்ம சுகத்தையும் ஒருங்கு இழந்த மனிதர்களே! நான் சொல்வதைக் கேளுங்கள், ஆன்மா சரீரத்தை விட்டு நீங்கிய பின்பு, பாவிகளே! அந்தப் பணத்தை இவ்விடத்து யாவர் அனுபவிப்பார்?

இதனது தாற்பரியம் : பூமியிலே புதைத்து வைக்கப்பட்ட பணம் வைத்தவர் இறந்தபின் அவருக்கு உதவாமற் போவதுமன்றிப் புதைத்த விடந் தெரிந்து எடுக்கக் கூடாமையினாலே பிறருக்கும் உதவா மற்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**23. வேதாளஞ் சேருமே வெள்ளெருக்குப் பூக்குமே**
**பாதாள மூலி படருமே மூதேவி**
**சென்றிருந்து வாழ்வளே சேடன் குடிபுகுமே**
**மன்றோரஞ் சொன்னார் மனை**

பதவுரை : மன்று ஓரம் சொன்னார் மனை - தருமசபையிலே பக்ஷபாதஞ் சொன்னவருடைய வீட்டிலே, வேதாளம் சேரும் - பேய்கள் (வந்து) சேரும், வெள்ளெருக்குப் பூக்கும் - வெள்ளெருக்கு (முளைத்து) மலரும், பாதாள மூலி படரும் - பாதாளமூலி யென்னுங் கொடி படரும், மூதேவி சென்று இருந்து வாழ்வள் - மூதேவியானவள் போய் நிலைபெற்று வாழ்வாள். சேடன் குடிபுகும் - பாம்புகள் குடியிருக்கும் என்றவாறு.

ஏ ஐந்தும் - அசை.

பொருள் : தருமசபையிலே பக்ஷபாதஞ் சொன்னவருடைய வீட்டிலே, பேய்கள் வந்து சேரும்; வெள்ளெருக்கு முளைத்து மலரும்; பாதாளமூலி யென்னுங் கொடி படரும்; மூதேவியானவள் போய் நிலைபெற்று வாழ்வாள்; பாம்புகள் குடியிருக்கும்.

இதனது தாற்பரியம் : வழக்கோரஞ் சொன்னவர் குடும்பத்தோடு அழிவதுமின்றி, அவர் குடியிருந்த வீடும் பாழாகும்.

**24. நீறில்லா நெற்றிபாழ் நெய்யில்லா வுண்டி பாழ்**
**ஆறில்லா வூருக் கழகுபாழ் - மாறில்**
**உடற்பிறப் பில்லா வுடம்புபாழ் பாழே**
**மடக்கொடி யில்லா மனை**

பதவுரை : நீறு இல்லா நெற்றி பாழ் - வீபூதியில்லாத நெற்றி பாழாகும், நெய் இல்லா உண்டி பாழ் - நெய்யில்லாத போசனம் பாழாகும், ஆறு இல்லா ஊருக்கு அழகு பாழ் - நதியில்லாத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊருக்கு அழகு பாழாகும், மாறு இல் உடற்பிறப்பு இல்லா உடம்பு பாழ் - மாறுபடாத சகோதரர் இல்லாத உடம்பு பாழாகும், மடக்கொடி இல்லா மனை பாழே - (இல்லறத் திற்குத்தக்க) மனைவியில்லாத வீடு பாழேயாகும் என்றவாறு.

பொருள் : வீபூதியில்லாத நெற்றி பாழாகும்; நெய்யில்லாத போசனம் பாழாகும்; நதியில்லாத ஊருக்கு அழகு பாழாகும்; மாறுபடாத சகோதரர் இல்லாத உடம்பு பாழாகும்; இல்லறத்திற்குத் தக்க மனைவியில்லாத வீடு பாழேயாகும்.

இதனது தாற்பரியம் : வீபூதியினாலே நெற்றியும் நெய்யினாலே போசனமும் நதியினாலே ஊருஞ் சகோதரராலே உடம்பும் மனைவியினாலே வீடுஞ் சிறப்படையும்.

**25. ஆன முதலி லதிகஞ் செலவானான்**
**மான மழிந்து மதி கெட்டுப் - போனதிசை**
**எல்லார்க்குங் கள்ளனா யேழ்பிறப்புந் தீயனாய்**
**நல்லார்க்கும் பொல்லனா நாடு**

பதவுரை : ஆன முதலில் செலவு அதிகம் ஆனான் - (தனக்குக்) கிடைத்த முதற் பொருளுக்குச் செலவு அதிகமானவன். மானம் அழிந்து- மானங்கெட்டு, மதிகெட்டு - அறிவு இழந்து, போன திசை எல்லார்க்கும் கள்ளனாகி, ஏழ் பிறப்பும் தீயனாய் - எழுவகைப் பிறப்புக்களினும் பாவம் உடையவனாகி, நல்லார்க்கும் பொல்லன் ஆம் - (தன்னிடத்து அன்பு வைத்த) பெண்டிர்களுக்கும் பொல்லாதவனாவான், நாடு - (இதனை) ஆராய்ந்து அறிவாயாக என்றவாறு.

பொருள் : தனக்குக் கிடைத்த முதற் பொருளுக்குச் செலவு அதிகமானவன், மானங்கெட்டு, அறிவு இழந்து, போன திசை எல்லார்க்குங் கள்ளனாகி, எழுவகைப் பிறப்புக்களினும் பாவம் உடையவனாகி, தன்னிடத்து அன்பு வைத்த பெண்டிர்களுக்கும் பொல்லாதவனாவான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனது தாற்பரியம் : வரவுக்கு அதிகமாகச் செலவு செய்பவன் பழி பாவங்களை அடைவன். ஆதலின், வரவுக்குத்தக்க செலவு செய்யவேண்டும்.

**26. மானங் குலங்கல்வி வண்மை யறிவுடைமை**
**தானந் தவமுயர்ச்சி தாளாண்மை - தேனின்**
**கசிவந்த சொல்லியர்மேல் காமுறுதல் பத்தும்**
**பசி வந்திடப் பறந்து போம்**

பதவுரை : பசி வந்திட - பசி நோய் ஒன்று மாத்திரம் வந்தால், மானம் - மானமும், குலம் - குலமும், கல்வி - கல்வியும், வண்மை- வாய் மையும், அறிவுடைமை - அறிவுடைமையும், தானம் - கொடை யும், தவம் - தவமும், உயர்ச்சி - உயர்வும், தாளாண்மை - தொழிலின் முயற்சியும் தேனின் கசிவந்த சொல்லியர்மேல் காமுறுதல் - தேன் பெருக்குப் போலத் தோன்றுகின்ற சொல் லையுடைய மங்கையர் மேல் ஆசை வைத்தலும் (ஆகிய) பத்தும் பறந்துபோம் - இப்பத்தும் விட்டோடிப்போம் என்ற வாறு.

பொருள் : பசி நோய் ஒன்று மாத்திரம் வந்தால் மானமுங் குலமுங் கல்வியும் வாய்மையும் அறிவுடைமையுங் கொடையுந் தவமும் உயர்வுந் தொழிலின் முயற்சியுந் தேன் பெருக்குப் போலத் தோன்றுகின்ற சொல்லையுடைய மங்கையர் மேல் ஆசை வைத்தலும் ஆகிய இப்பத்தும் விட்டோடிப்போம்.

இதனது தாற்பரியம் : மான முதலிய எல்லா நலங்களையுங் கெடுத்தலி னாலே பசி நோயினுங் கொடியது பிறிதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**27. ஒன்றை நினைக்கி னதுவொழிந்திட் டொன்றாகும்**
**அன்றி யதுவரினும் வந்தெய்தும் - ஒன்றை**
**நினையாத முன்வந்து நிற்பினு நிற்கும்**
**எனையாளு மீசன் செயல்**

பதவுரை : ஒன்றை நினைக்கின் அது ஒழிந்திட்டு ஒன்று ஆகும் - ஒரு பொருளைப் பெற நினைத்தால், அப்பொருள் கிடையாமல் வேறொரு பொருள் கிடைத்தாலுங் கிடைக்கும். அன்றி அதுவரினும் வந்து எய்தும் - அப்படியல்லாமல் அப்பொருளே வந்து கிடைத்தாலுங் கிடைக்கும். ஒன்றை நினையாத முன் வந்து நிற்பினும் நிற்கும் (இன்னும்) ஒரு பொருளை நினையா திருக்கமுன்னே அது தானே வந்து நின்றாலும் நிற்கும், எனை ஆளும் ஈசன்செயல் - (இவைகளெல்லாம்) என்னை ஆண்ட ருளும் கடவுளுடைய செய்கைகளாகும் என்றவாறு.

பொருள் : ஒரு பொருளைப் பெற நினைத்தால், அப்பொருள் கிடையாமல் வேறொரு பொருள் கிடைத்தாலுங் கிடைக்கும். அப்படியல்லாமல் அப்பொருளே வந்து கிடைத்தாலுங் கிடைக்கும். இன்னும் ஒரு பொருளை நினையாதிருக்க முன்னே அது தானே வந்து நின்றாலும் நிற்கும், இவைக ளெல்லாம் என்னை ஆண்டருளுங் கடவுளுடைய செய்கை களாகும்.

இதனது தாற்பரியம்: இரு வினைகளுக்கீடாக இன்பதுன்பங்களை ஊட்டுங் கடவுளுடைய கருத்தின் படியேயன்றி ஆன்மாக்களுடைய கருத்தின்படி ஒன்றும் நடவாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**28. உண்பது நாழி யுடுப்பது நான்கு முழம்**
**எண்பது கோடிநினைந் தெண்ணுவன - கண்புதைந்த**
**மாந்தர் குடிவாழ்க்கை மண்ணின் கலம்போலச்**
**சாந்துணையுஞ் சஞ்சலமே தான்**

பதவுரை : கண்புதைந்த மாந்தர் - அகக்கண் குருடாக இருக்கின்ற மனிதர், உண்பது நாழி - உண்பது ஒரு நாழியரிசி அன்னமேயாகும். உடுப்பது நான்கு முழம் - (அவர்) உடுப்பது நான்கு முழ வஸ்திரமேயாகும். (இப்படியாகவும்) நினைந்து எண்ணுவன எண்பதுகோடி - (அவர்) நினைத்து எண்ணுங் காரியங்களோ எண்பது கோடியாகும். (ஆதலினால்) மண்ணின் கலம்போலச் சாம் துணையும் கடி வாழ்க்கை சஞ்சலமே - மட்பாத்திரம் அழிந்தாற் போல (அவர் சரீரம்) அழியும் வரையும் (அவருடைய) குடி வாழ்க்கையினாலே துன்பமே விளையும் என்றவாறு.

தான் -அசை.

பொருள் : அகக்கண் குருடாக இருக்கின்ற மனிதர் உண்பது ஒரு நாழியரிசி அன்னமேயாகும். அவர் உடுப்பது நான்கு முழ வஸ்திரமேயாகும். இப்படியாகவும் அவர் நினைத்து எண்ணுங் காரியங்களோ எண்பது கோடியாகும். ஆதலினால் மட் பாத்திரம் அழிந்தாற் போல அவர் சரீரம் அழியும் வரையும் அவருடைய குடி வாழ்க்கையினாலே துன்பமே விளையும்.

இதனது தாற்பரியம் : உள்ளதே போதும் என்று திருப்தி அடையாதவர் சாங்காறும் அடைவது துன்பமேயன்றிப் பிறிதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**29. மரம் பழுத்தால் வெளவாலை வாவென்று கூவி
இரந்தழைப்பார் யாருமங் கில்லை - சுரந்தமுதங்
கற்றா தரல்போற் கரவா தளிப்பரேல்
உற்றா ருலகத் தவர்**

பதவுரை : மரம் பழுத்தால் - மரம் பழுத்திருந்தால், வா என்று வெளவாலைக் கூவி இரந்து அழைப்பார் அங்கு யாவரும் இல்லை - (இப் பழத்தைத் தின்னுதற்கு) வா என்று வெளவாலைக் கூவி வேண்டி அழைப்பவர் அம்மரத்தருகில் ஒருவரும் இல்லை. கன்று ஆ அமுதம் சுரந்து தரல்போல் கரவாது அளிப்பரேல் - கன்றையுடைய பசுவானது பாலைச் சுரந்து கொடுத்தல் போல ஒளிக்காமற் கொடுப்பாராயின், உலகத்தவர் உற்றார் - உலகத்தார் (அவ் வெளவால் போலத் தாமே வந்து) உறவினராவார் என்றவாறு.

பொருள் : மரம் பழுத்திருந்தால், இப் பழத்தை தின்பதற்கு வா என்று வெளவாலைக் கூவி வேண்டி அழைப்பவர் அம் மரத்தருகில் ஒருவரும் இல்லை. கன்றையுடைய பசுவானது பாலைச் சுரந்து கொடுத்தற் போல ஒளிக்காமற் கொடுப்பாராயின், உலகத்தார் அவ் வெளவால் போலத் தாமே வந்து உறவினராவார்.

இதனது தாற்பரியம் : கொடையாளருக்கு எல்லாரும் தாமே உறவினராவார்.

**30. தாந்தாம்முன் செய்தவினை தாமே யநுபவிப்பார்
பூந்தா மரையோன் பொறி வழியே - வேந்தே
ஒறுத்தாரை யென்செயலா மூரெல்லா மொன்றா
வெறுத்தாலும் போமோ விதி**

பதவுரை : வேந்தே - அரசனே, முன் தாம் தாம் செய்தவினை- முற்பிறப்பிலே தாந்தாஞ் செய்த நல்வினை தீவினைகளை, பூந்தாமரையோன் பொறி வழியே தாமே அனுபவிப்பார் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாமரை மலரில் இருக்கின்ற பிரமா விதித்தபடியே தாமே அனுபவிப்பார்கள். ஒறுத்தாரை என் செயலாம் - (தீவினை யினாலே தூண்டப்பட்டுத்) தீங்கு செய்தவரை நாம் யாது செய்யலாம்? ஊர் எல்லாம் ஒன்றா வெறுத்தாலும் விதி போமோ - ஊரிலுள்ளார் எல்லாருந் (துணையாகத்) திரண்டு வெறுத்தாலும் விதி போகுமோ? போகாது என்றவாறு.

பொருள் : அரசனே! முற்பிறப்பிலே தாந்தாஞ் செய்த நல்வினை தீவினைகளைத் தாமரை மலரில் இருக்கின்ற பிரமா விதித்தபடியே தாமே அனுபவிப்பார்கள். தீவினையினாலே தூண்டப்பட்டுந் தீங்கு செய்தவரை நாம் யாது செய்யலாம்? ஊரிலுள்ளார் எல்லாருந் துணையாகத் திரண்டு வெறுத்தாலும் விதி போகுமோ? போகாது.

இதனது தாற்பரியம் : தமக்கு ஒருவன் துன்பஞ் செய்யின், அது தாம் முன் செய்த தீவினைக்கீடாகக் கடவுளாலே தமக்குக் கிடைத்த தென்று அமைவதே அறிவு.

**31. இழுக்குடைய பாட்டிற் கிசைநன்று சாலும்**
**ஒழுக்க முயர்குலத்தி னன்று - வழுக்குடைய**
**வீரத்தி னன்று விடாநோய் பழிக்கஞ்சாத்**
**தாரத்தி னன்று தனி**

பதவுரை : இழுக்கு உடைய பாட்டிற்கு இசை நன்று - இலக்கண வழுக்க ளையுடைய செய்யுளினும் இசை நல்லது. உயர் குலத்தின் சாலும் ஒழுக்கம் நன்று - உயர்வாகிய குலத்தினும் மாட்சிமைப்பட்ட ஒழுக்கம் நல்லது. வழுக்கு உடைய வீரத்தின் விடாநோய் நன்று - தவறுதலையுடைய வீரத்தினும் தீரா வியாதி நல்லது, பழிக்கு அஞ்சாத் தாரத்தின் தனி நன்று - பழிச்சொல்லுக்கு அஞ்சாத மனைவியோடு கூடி வாழ்தலினும் தனியே இருத்தல் நல்லது என்றவாறு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள் : இலக்கண வழுக்களையுடைய செய்யுளினும் இசை நல்லது. உயர்வாகிய குலத்தினும் மாட்சிமைப்பட்ட ஒழுக்கம் நல்லது. தவறுதலையுடைய வீரத்தினுந் தீரா வியாதி நல்லது, பழிச்சொல்லுக்கு அஞ்சாத மனைவியோடு கூடி வாழ்தலினுந் தனியே இருத்தல் நல்லது.

இதனது தாற்பரியம் : இலக்கணப் பிழையுடைய பாட்டும் நல்லொழுக்க மில்லாத உயர்குலமுந் தவறுதலையுடைய வீரமுங் கற்பில்லாத மனைவியோடு கூடிய இல்வாழ்க்கையுந் தீரா வசையை விளைவிக்கும்.

**32. ஆறிடு மேடு மடுவும்போ லாஞ்செல்வ**
**மாறிடு மேறிடு மாநிலத்தீர் - சோறிடுந்**
**தண்ணீரும் வாருந் தருமமே சார்பாக**
**உண்ணீர்மை வீறு முயர்ந்து**

பதவுரை : மாநிலத்தீர் - பெரிய பூமியிலுள்ளவர்களே ஆறு இடும் மேடும் மடுவும் போல் - ஆற்று வெள்ளத்தினால் உண்டாக்கப்படும் மேடும் பள்ளமும் போல, செல்வம் ஏறிடும் மாறிடும் - செல்வம் வளர்வதும் தேய்வதுமாய் இருக்கும். (ஆதலினால்) சோறு இடும் - (இரப்பவருக்கு உண்ண) அன்னத்தை இடுங்கள். தண் ணீரும் வாரும் - (குடிக்கச்) சலத்தையும் வாருங்கள், தருமமே சார்பு ஆக உள் நீர்மை உயர்ந்து வீறும் - (இப்படிச் செய்து வருவீர்களானால்) இந்தத் தருமமே துணையாக உள்ளத்திற் (சுத்தியாகிய) தன்மை ஓங்கி விளங்கும் என்றவாறு.

ஆம் -அசை.

பொருள் : பெரிய பூமியிலுள்ளவர்களே! ஆற்று வெள்ளத்தினால் உண் டாக்கப்படும் மேடும் பள்ளமும் போலச் செல்வம் வளர்வதுந் தேய்வதுமாய் இருக்கும். ஆதலினால் இருப்ப வர்க்கு உண்ண அன்னத்தை இடுங்கள். குடிக்கச் சலத்தையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாருங்கள், இப்படிச் செய்து வருவீர்களானால் இந்தத் தருமமே துணையாக உள்ளத்திற் சுத்தியாகிய தன்மை ஓங்கி விளங்கும்.

இதனது தாற்பரியம் : நிலையில்லாத செல்வம் உள்ள பொழுதே இரப்பவர்களுக்கு அன்னபானீயங்களைக் கொடுக்கிற் சித்தசுத்தி உண்டாகும்.

## 33. வெட்டனவை மெத்தனவை வெல்லாவாம் வேழத்திற்
## பட்டுருவுங் கோல் பஞ்சிற் பாயாது - நெட்டிருப்புப்
## பாரைக்கு நெக்குவிடாப் பாறை பசுமரத்தின்
## வேருக்கு நெக்கு விடும்

பதவுரை : வேழத்திற் பட்டு உருவுங் கோல் பஞ்சில் பாயாது - (வலிய) யானையின் மேலே பட்டுருவும் அம்பானது (மெல்லிய) பஞ்சின் மேலே பாயாது, (அது போல) வெட்டெனவை மெத்தெனவை வெல்லா - வலிய சொற்கள் மெல்லிய சொற்களை வெல்லமாட்டா. நெடு இருப்புப் பாரைக்கு நெக்கு விடாப்பாறை - நெடுமையாகிய இரும்பும் பாரைக்குப் பிளவாத கருங்கற் பாறையானது. பசுமரத்தின் வேருக்கு நெக்கு விடும் - பச்சை மரத்தின் வேருக்குப் பிளந்துபோம் என்றவாறு.

ஆம் - ஆசை

பொருள் : வலிய யானையின் மேலே பட்டுருவும் அம்பானது மெல்லிய பஞ்சின் மேலே பாயாது; அது போல வலிய சொற்கள் மெல்லிய சொற்களை வெல்லமாட்டா. நெடுமையாகிய இரும்புப் பாரைக்குப் பிளவாத கருங்கற் பாறையானது பச்சை மரத்தின் வேருக்குப் பிளந்துபோம்.

இதனது தாற்பரியம் : வலியசொல்லே மெல்லிய சொல்லுக்குத் தோற்றுப் போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**34. கல்லானே யானாலுங் கைப்பொருளொன் றுண்டாயின்**
**எல்லாருஞ் சென்றங் கெதிர் கொள்வர் - இல்லானை**
**இல்லாளும் வேண்டாண் மற்றீன்றெடுத்த தாய்வேண்டாள்**
**செல்லா தவன்வாயிற் சொல்**

பதவுரை : கல்லானே ஆனாலும் கைப்பொருள் ஒன்று உண்டாயின் - (ஒருவன்) படியாதவனேயாயினும் (அவன்) கையிலே பொருள் மாத்திரம் இருந்தால், எல்லாருஞ் சென்று எதிர்கொள்வர் - (அவனை) யாவரும் போய் எதிர்கொண்டு உபசரிப்பர், இல் லானை இல்லாளும் வேண்டாள் - (படித்தவனேயாயினும்) பொருள் இல்லாதவனை (அவன்) மனைவியும் விரும்பாள், ஈன்று எடுத்த தாய் வேண்டாள் - (அவனைப் பெற்று வளர்த்த) மாதாவும் விரும்பாள், அவன் வாயிற் சொல் செல்லாது - அவன் வாயிற் பிறக்குஞ் சொல்லானது பயன்படாது என்றவாறு.

அங்க, மற்று - அசை

பொருள் : ஒருவன் படியாதவனேயாயினும் அவன் கையிலே பொருள் மாத்திரம் இருந்தால் அவனை யாவரும் போய் எதிர்கொண்டு உபசரிப்பர், படித்தவனேயாயினும் பொருள் இல்லாதவனை அவன் மனைவியும் விரும்பாள், அவனைப் பெற்று வளர்த்த மாதாவும் விரும்பாள், அவன் அவன் வாயிற் பிறக்குஞ் சொல்லானது பயன்படாது.

இதனது தாற்பரியம்: கல்லாதவனேயாயினும் பொருளுடையவனை எல்லாரும் மதிப்பர். கற்றவனேயாயினும் பொருளில்லாத வனை ஒருவரும் மதியார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**35. பூவாதே காய்க்கு மரமுமுள மக்களுளும்**
**ஏவாதே நின்றுணர்வார் தாமுளரே - தூவா**
**விரைத்தாலு நன்றாகா வித்தெனவே பேதைக்**
**குரைத்தாலுந் தோன்றா துணர்வு**

பதவுரை : பூவாதே காய்க்கும் மரமும் உள - பூவாமலே காய்க்கின்ற மரங்களும் உண்டு. (அதுபோல) மக்களும் ஏவாதே நின்று தாம் உணர்வார் உளர் - மனிதர்களுள்ளும் ஏவாமலே இருந்து தாமே அறிந்து செய்ய வல்லவரும் உண்டு. தூவா விரைத்தாலும் நன்று ஆகாவித்து என - தூவி விரைத்தாலும் முளைத்துப் பயன்படாத விதை போல, பேதைக்கு உரைத்தாலும் உணர்வு தோன்றாது - மூடனுக்கு (எடுத்து விளங்கச்) சொன்னாலும் (அதனை அறியும்) அறிவு (அவனிடத்து) உண்டாகாது என்றவாறு.

பொருள் : பூவாமலே காய்க்கின்ற மரங்களும் உண்டு. அது போல மனிதர்களுள்ளும் ஏவாமலே இருந்து தாமே அறிந்து செய்ய வல்லவரும் உண்டு. தூவி விரைத்தாலும் முளைத்துப் பயன்படாத விதை போல, மூடனுக்கு எடுத்து விளங்கச் சொன்னாலும் அறிவு அவனிடத்து உண்டாகாது.

இதனது தாற்பரியம் : குறிப்பறிந்து செய்வோரே அறிவுடையோர் அறிவிக்கவும் அறிந்து செய்யாதவர் மூடர்.

**36. நண்டு சிப்பி வேய்கதலி நாசமுறுங் காலத்திற்**
**கொண்ட கருவளிக்குங் கொள்கைபோ- லொண்டொடீ**
**போதந் தனங்கல்வி பொன்றவருங் காலமயன்**
**மாதர் மேல் வைப்பார் மனம்**

பதவுரை : ஒள் தொடீ - ஒள்ளிய வளையலை அணிந்தவளே, நண்டு சிப்பிவேய் கதலி - நண்டுஞ் சிப்பியும் மூங்கிலும் வாழையும் நாசம் உறுங் காலத்தில் - தாம் அழிவை அடையுங் காலத்திலே,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்ட கரு அளிக்கும் கொள்கை போல் - (முறையே தாம்) கொண்ட (குஞ்சும் முத்தும் அரிசியும் காய்க்குலையும் ஆகிய) கருக்களை ஈனுந் தன்மை போல, (மனிதர்கள்) போதம் தனம் கல்வி பொன்ற வருங்காலம் - ஞானமும் செல்வமும் வித்தையும் அழிய வருங்காலத்திலே, அயல் மாதர் மேல் மனம் வைப்பார் - பிறர் மனைவியர்மேல் மனம் வைப்பார்கள் என்றவாறு.

பொருள்: ஒள்ளிய வளையலை அணிந்தவளே! நண்டுஞ் சிப்பியும் மூங்கிலும் வாழையுந் தாம் அழிவை அடையுங் காலத்திலே முறையே தாங்கொண்ட குஞ்சும் முத்தும் அரிசியுங் காய்க் குலையும் ஆகிய கருக்களை ஈனுந்தன்மை போல, மனிதர்கள் ஞானமுஞ் செல்வமும் வித்தையும் அழிய வருங் காலத்திலே, பிறர் மனைவியர்மேல் மனம் வைப்பார்கள்.

இதனது தாற்பரியம் : ஒருவன் பிறன் மனையாளை இச்சிக்கின், அது அவனிடத்துள்ள ஞானம், செல்வம், கல்வி என்னும் மூன்றும் கெடுதற்கு அறிகுறியாகும்.

## 37. வினைப் பயனை வெல்வதற்கு வேத முதலாம்
அனைத்தாய நூலகத்து மில்லை - நினைப்பதெனக்
கண்ணுறுவ தல்லாற் கவலைப்படே னெஞ்சே மெய்
விண்ணுறுவார்க் கில்லை விதி

பதவுரை : வேதம் முதலாம் அனைத்து ஆய நூலகத்தும் - வேத முதலாகிய எல்லா நூல்களினுள்ளும், (ஆராய்ந்தால்) வினைப் பயனை வெல்வதற்கு - இருவினைப் பயனை வெல்வதற்கு (உபாயம்), அது நினைப்பு எனக் கண்ணுறுவது அல்லால் இல்லை - அவ்வினைப் பயன் (நம்முடைய) நினைவாலாவது என்று அறிவதல்லாமல் வேறு இல்லை. நெஞ்சே கவலை ப்படேல் - மனமே கவலையை அடையாதே. மெய் விண் உறு வார்க்கு விதி இல்லை - நித்தியமாயுள்ள ஞானாகாசமாகிய பதியோடு கலந்து நிற்பவருக்கு ஊழ் இல்லை என்றவாறு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள் : வேத முதலாகிய எல்லா நூல்களினுள்ளும் ஆராய்ந்தால், இருவினைப் பயனை வெல்வதற்கு உபாயம் அவ்வினைப் பயன் நம்முடைய நினைவாலாவது என்று அறிவதல்லாமல் வேறு இல்லை. மனமே கவலையை அடையாதே. நித்திய மாயுள்ள ஞானாகாசமாகிய பதியோடு கலந்து நிற்பவருக்கு ஊழ் இல்லை.

இதனது தாற்பரியம் : பரஞானத்தினாலே பதியைத் தெளிந்து நோக்கி அன்பு செய்யப் பெற்றவர் அப்பகுதியையேயன்றிப் பிராரத்த வாசனை தாக்குதற்குரிய மற்றைப் பதார்த்தங்களைச் சிறிதுங் காணாராகலின், அவருக்கு விதி இல்லை.

**38. நன்றென்றுந் தீதென்றும் நானென்றுந் தானென்றும்**
**அன்றென்றும் மாமென்று மாகாதே - நின்ற நிலை**
**தானதாந் தத்துவமாஞ் சம்பறுத்தார் யாக்கைக்குப்**
**போனவ தேடும் பொருள்**

பதவுரை : நன்று என்றும் - (இது) நல்லது என்றும், தீது என்றும் - (இது) தீயது என்றும், நான் என்றும் - (இது செய்தவன்) நான் என்றும், தான் என்றும் - (இது செய்தவன்) அவன் என்றும், அன்று என்றும் - (இது) அன்று என்றும், ஆம் என்றும் - (இது) ஆகும் என்றும் - ஆகாதே நின்ற நிலை - பேதஞ்செய்யாமலே (பதி யினுள் அடங்கி இரண்டறக் கலந்து) நின்ற நிலையே, தான் அது ஆம் தத்துவம் ஆம் - (ஆன்மாவாகிய) தான் (பதியாகிய) அதுவாகுகின்ற உண்மை நிலையாகும். சம்பு அறுத்தார் யாக் கைக்குத் தேடும் பொருள் போனவா - சம்பை அறுத்தவர் அதனைக் கட்டுதற்குத் தேடும் பொருள் அதுவன்றி வேறில் லாமற் போனவாறு போலப் பாசத்தின் வேறாகக் காணப்பட்ட தன்னைப்பதியினுள்ளே அடக்குதற்குத் தேடும் பொருள் தானன்றி வேறில்லை என்றவாறு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள் : இது நல்லது என்றும்; இது தீயது என்றும்; இது செய்தவன் நான் என்றும்; இது செய்தவன் அவன் என்றும்; இது அன்று என்றும்; ஆகும் என்றும்; பேதஞ்செய்யாமலே பதியினுள் அடங்கி இரண்டறக் கலந்து நின்ற நிலையே, ஆன்மாவாகிய தான் பதியாகிய அதுவாகுகின்ற உண்மை நிலையாகும். சம்பை அறுத்தவர் அதனைக் கட்டுதற்குத் தேடும் பொருள் அதுவன்றி வேறில்லாமற் போனவாறு போலப் பாசத்தின் வேறாகக் காணப்பட்ட தன்னைப் பதியினுள்ளே அடக்குதற்குத் தேடும் பொருள் தானன்றி வேறில்லை.

இதனது தாற்பரியம் : ஆன்மாபதியின் வேறாயினுங் கண்ணொளியும் சூரியனொளியும் போல வேற்றுமை சிறிதுந் தோன்றா வண்ணம் ஒற்றித்து நிற்கும் நிலையே தான் அதுவாதலாகிய உண்மை நிலை.

**39. முப்பதா மாண்டளவில் மூன்றற் றொருபொருளைத்**
**தப்பாமற் றன்னுட் பெறானாயின் - செப்புங்**
**கலையுளவே யாகுமாங் காரிகையார் தங்கண்**
**முலையளவே யாகுமா மூப்பு**

பதவுரை : முப்பது ஆம் ஆண்டு அளவில் - முப்பது வயதினளவிலே, மூன்று அற்று - (மலம், மாயை, கருமம் என்னும் பந்தம்) மூன்றும் நீங்கி, ஒரு பொருளைத் தப்பாமல் தன்னுட் பெறான் ஆயின் - ஒப்பில்லாத முதற் பொருளாகிய பதியைத் தவறாமற் தன்னுள்ளே (அநுபூதி ஞானத்தினால் ஒருவன்) அடையா னாயின், செப்புங் கலை அளவே ஆகும், (அம்முதற் பொருள் அவனுக்கு அவன்) கற்ற சாத்திர ஞானத்தினளவேயாகும். மூப்புக்காரி கையார் தங்கள் முலை அளவே ஆகும் - (அவன் பின்வரும் முதுமைப் பருவத்திலே தான் கண்ட) பெண் களுடைய தனத்தினளவாகவே (தளர்ச்சியுடையவன்) ஆவன் (ஆதலால்) என்றவாறு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆம் (இரண்டும்) ஆசை

பொருள் : முப்பது வயதினளவிலே மலம், மாயை, கருமம் என்னும் பந்தம் மூன்றும் நீங்கி, ஒப்பில்லாத முதற் பொருளாகிய பதியைத் தவறாமற் தன்னுள்ளே அநுபூதி ஞானத்தினால் ஒருவன் அடையானாயின், அம் முதற் பொருள் அவனுக்கு அவன் கற்ற சாத்திர ஞானத்தினளவேயாகும். அவன் பின்வரும் முதுமைப் பருவத்திலே தான் கண்ட பெண் களுடைய தனத்தினளவாகவே தளர்ச்சி உடையவன் ஆவன்.

இதனது தாற்பரியம் : அநுபூதிஞானம் நிட்டையினாலல்லது பெறப்படா மையாலும் நிட்டை உடம்பும் அறிவும் தளர்ச்சியடையும் முதுமைப் பருவத்திற் சிந்திக்கமாட்டாமையாலும் ஞானாசிரி யரை அடைந்து ஞானசாத்திரங்களைக் கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டைகூடல் என்னும் நான்கையும் இளமைப் பருவத்திற்றானே செய்தல் வேண்டும்.

**40. தேவர் குறளுந் திருநான் மறைமுடிவு**
**மூவர் தமிழு முனிமொழியுங் - கோவை**
**திருவா சகமும் திருமூலர் சொல்லும்**
**ஒருவா சகமென் றுணர்**

பதவுரை : தேவர் குறளும் - திருவள்ளுவ நாயனாருடைய திருக்குறளும், திருநான்மறை முடிவும் - சிறப்புப் பொருந்திய நான்கு வேதங் களின் முடிவாகிய உபநிடதங்களும், மூவர் தமிழும் - (திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார், திருநாவுக்கரசு நாயனார், சுந்தரமூர்த்திநாயனார் என்னும் சமயகுரவர்) மூவர்களுடைய (தேவராகிய) தமிழ்வேதமும், முனி மொழியும் - வியாச முனிவ ருடைய வேதாந்த சூத்திரமும், கோவை திருவாசகமும் - (திருவாதவூரடிகளுடைய) திருக்கோவையார், திருவாசகங் களும், திருமூலர் சொல்லும் - திருமூலநாயனாருடைய திரு மந்திரமும், ஒருவாசகம் என்று உணர் - ஒரு பொருளையே குறித்த வாக்கியங்களென்று அறிவாயாக என்றவாறு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள் : திருவள்ளுவ நாயனாருடைய திருக்குறளும்; சிறப்புப் பொருந்திய நான்கு வேதங்களின் முடிவாகிய உபநிடதங் களும்; திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார், திருநாவுக்கரசு நாயனார், சுந்தரமூர்த்தி நாயனார் என்னும் சமயகுரவர் மூவர்களுடைய தேவாரமாகிய தமிழ்வேதமும்; வியாச முனிவருடைய வேதாந்த சூத்திரமும்; திருவாதவூரடிகளுடைய திருக்கோவையார், திருவாசகங்களும்; திருமூலநாயனா ருடைய திருமந்திரமும் ஒரு பொருளையே குறித்த வாக்கியங் களென்று அறிவாயாக.

இதனது தாற்பரியம் : திருக்குறள் முதலிய நூல்களெல்லாம் வேறு வேறு வாக்கியங்களாகத் தோன்றினும் பதிலக்கணமும் பசுலக் கணமும் பந்தலக்கணமும் முத்திலக்கணமும் ஆகிய இவைகளை ஒரு தன்மையாகவே அறிவிக்கும் நூல்களாகும்.

நல்வழி மூலமும் உரையும் முற்றிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ISBN: 978-955-9233-86-2

Guru Printers - Thirunelvely, Jaffna

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org